

அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மெட்டுக்குண்டு, கடம்பன்குளம், இராமநாதபுரம் போன்ற பல்வேறு கிராமங்களில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினராக 10 வது முறையாக வெற்றி பெறச் செய்த வாக்காள பெருமக்களுக்கு முன்னாள் அமைச்சரும்,விருதுநகர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் நேரில் சென்று நன்றி தெரிவித்தார். உடன் முன்னாள் சேர்மன் சுப்புராஜா,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, ஒன்றிய திமுக செயலாளர் கனிமுருகன், விருதுநகர் மகேஷ் ஆகியோர் இருந்தனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி ஊராட்சியில் நாட்டின் 80 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தரணிவேந்தன் கலந்து கொண்டார். உடன் வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் ஊராட்சி மன்ற தலைவர்விஜயலட்சுமி ஜெயக்குமார் ஆகியோர் உள்ளனர்.

### பரிசளிப்பு விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்கிறார்!

# மெஞ்ஞானபுரத்தில் அகில இந்திய மின்னொளி கபடிப் போட்டி!

## முன்னாள் அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்!

தூத்துக்குடி, ஆக.17-

மெஞ்ஞானபுரத்தில் அகில இந்திய 'ஏ' கிரேடு ஆண்களுக்கான மின்னொளி கபாடி போட்டியை முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் துவங்கி வைத்தார். இப்போட்டியில் இந்தியா முழுவதும் இருந்து 19 அணிகள் கலந்து கொள்கின்றன. வெற்றி பெறும் அணிக்கு ரொக்க பரிசு ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் பரிசு மற்றும் வெற்றி கோப்பையை கனிமொழி கருணாநிதி எம்.பி மற்றும் முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் வழங்குகின்றனர்.



தமிழகத்தில் பல கபாடி வீரர்களை உருவாக்கிய கிறிஸ்டோபர் ராஜன் நினைவாக தூத்துக்குடி மாவட்ட அமைச்சூர் கபடி கழகம், ஜாண் தாமஸ் கபாடி கழகம் இணைந்து நடத்தும் அகில இந்திய 'ஏ' கிரேடு ஆண்களுக்கான மின்னொளி கபாடி போட்டி ஆக.14 ம் தேதி (வெள்ளிக்கிழமை) மெஞ்ஞானபுரம் அம்புரோஸ் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கியது. முதல் போட்டியில் கன்னியாகுமரி ஜான்ஸ் அகடாமி அணியும், ஆந்திராவைச் சேர்ந்த ஆந்திரா கைய்ஸ் அணியும் மோதியது. மெஞ்ஞானபுரம் சேகர குருவானவர் கிங்ஸ்லி ஜான் ஆரம்பஜெபம் செய்தார். போட்டியை முன்னாள் அமைச்சர் அனிதா சஆர்.ராதாகிருஷ்ணன் துவங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் உமரிசங்கர், மாவட்ட பொருளாளர் ராமநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராமஜெயம், அஜிதா ஆக்னல், இந்திய கபடி அணி வீரர்கள் ஜீவன்குமார், சண்முகசுந்தரம், மாவட்ட பிரதிநிதிகள் ஜெயபிரகாஷ், ராஜபிரபு, திமுக ஒன்றியச் செயலாளர்கள் மதன்ராஜ், சதீஷ்குமார், ஜோசப், செங்குழி ரமேஷ், நகரச் செயலாளர்கள் இளங்கோ, கோபி, வாள் சுடலை, கானம் பேரூராட்சி முன்னாள் தலைவர் செந்தமிழ் சேகர், மாவட்ட சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் செந்தில், சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியக் குழு முன்னாள் உறுப்பினர் பிச்சிவிளை சுதாகர், தளபதி எடிசன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் சுரேஷ்குமார், கார்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். போட்டி இன்று ஆக 15, நாளை ஆக 16ம் தேதிகளிலும் நடக்கிறது. போட்டியில் உ.பியைச் சேர்ந்த ரதி வேதா, பெங்களூர் ரைசிங் புல்ஸ், மும்பை துறைமுகம் அணி, தானே டி.எம்.சி, கர்நாடகாவைச் சேர்ந்த பேங் ஆப் பரோடா, பெங்க@ர் உமா மகேஸ்வரி அகடாமி, விஜயவாடாவைச் சேர்ந்த ஆந்திரா கைய்ஸ், கேரளாவைச் சேர்ந்த ஜே.கே அகடாமி, நாக்பூர் யாதவ் அகடாமி, கர்நாடகவைச் சேர்ந்த ரெயுல் வீல் பாக்டரி, யூனிவர்சிட்டி எஸ்.ஆர்.எம், தஞ்சாவூர் யூனிவர்சிட்டி பீரீஸ்ட்,

சென்னை கஸ்டம்ஸ், தமிழ்நாடு போலீஸ், சாய் மயிலாடுதுறை, தூத்துக்குடி எஸ்.எஸ்.பி.கே.சி, இராமணி நினைவு அணி, ஜான்ஸ் அகடாமி , அளத்தங்கரை, மெஞ்ஞானபுரம் ஜான் தாமஸ் கபடி அணிகள் கலந்து கொள்கின்றன. மின்னொளியில் நடைபெறும் இப்போட்டியில் முதல் பரிசு பெறும் அணிக்கு ரொக்கப் பணம் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் மற்றும் வெற்றிக் கோப்பையும், இரண்டாம் பரிசு ரூ.1 லட்சம் மற்றும் வெற்றிக் கோப்பையும்,

மூன்றாம் பரிசு பெறும் 2 அணிகளுக்கு தலா ரூ.75 ஆயிரம் மற்றும் வெற்றிக் கோப்பையும் வழங்கப்படுகிறது. இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி பரிசு வழங்குகிறார்.

ஏற்பாடுகளை முன்னாள் அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. செய்துள்ளார்.

### கல்வி நிறுவனங்களில் போதை பொருள்கள்

# டாஸ்மாக் ஆன்லைன் ஆப்பை உருவாக்கும் த.வெ.க. அரசு!

## எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ. கண்டனம்!

நாகர்கோவில், ஆக.17-

கல்வி நிறுவனங்களில் போதை பொருட்களின் பயன்பாடு தவெக ஆட்சியில் அதிகரித்துள்ளது. உரிய நடவடிக்கை எடுக்காத அரசை நாகர் கோவில் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் வன்மையாக கண்டித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தக்கலை அரசு மேல் நிலைப்பள்ளியில் சில மாணவிகள், பள்ளி வளாகத்திலேயே மதுபானம் அருந்தியதாக வெளியாகியுள்ள தகவலும், அது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் பரவியிருப்பதும் மிகுந்த அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்க வேண்டிய பள்ளி வளாகமே இது போன்ற சம்பவங்களுக்கு இடமாக மாறியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது.

ஒருபுறம், பள்ளி மாணவர்களிடம் மதுபானம் மற்றும் போதைப்பொருட்களின் தாக்கம் குறித்து அரசு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய நிலையில், மறுபுறம் டாஸ் மாக் மதுபானங்களை ஆன்லைனில் ஆர்டர் செய்து வாங்கும் வசதியை அறிமுகப்படுத்தியிருப்பது எந்த வகையான சமூக முன்னுதாரணத்தை உருவாக்குகிறது என்ற கேள்வி எழுகிறது. தற்போதைய த.வெ.க. அரசு டாஸ்மாக்கில் ஆன்லைன் ஆர்டர் மற்றும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மூலம் கடையில் பெற்றுக்கொள்ளும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

மதுபான விற்பனையை அதிகப்படுத்துவதில் காட்டப்படும் வேகத்தைவிட, மாணவர்களை மதுபானம் மற்றும் போதைப்பொருட்களிலிருந்து பாதுகாப்பதில் அரசு அதிக அக்கறை காட்ட வேண்டும்.

இதனுடைய தொடர்ச்சி ஆன்லைன் டெலிவரி செயலிகள் மூலம் மதுபானங்களை டோர் டெலிவரி செய்யும் நிலைக்கு கொண்டு செல்லும் இது இளைய சமுதாயத்தினர் வாழ்வை மேலும் சீரழித்து விடும்.

பள்ளிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் மதுபானம் மற்றும் போதைப்பொருட்கள் சட்டவிரோதமாக சிறார்களுக்கு விற்பனை செய்யப்படுகிறதா என்பது குறித்து காவல்துறையும் சம்பந்தப்பட்ட துறைகளும் தொடர் மற்றும் தீவிர சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இந்தச் சம்பவத்தின் பின்னணி குறித்து முழுமையான விசாரணை நடத்தி, மாணவர்களுக்கு மதுபானம் கிடைக்க காரணமானவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில், மாணவர்களை அவமானப்படுத்துவதோ அல்லது சமூக வலைதளங்களில் அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்துவதோ கூடாது. அவர்களுக்கு தேவையான ஆலோசனை, விழிப்புணர்வு மற்றும் உளவியல் வழிகாட்டுதலை வழங்குவதும் அரசின் கடமையாகும். மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதே அரசின் முதல் கடமை.

பள்ளிகள் கல்விக்கூடங்களாக இருக்க வேண்டும்; மதுவுக்கும் போதைக்கும் இடமாக மாறக்கூடாது. தாவெகா ஆட்சியில் கல்வி நிறுவனங்களில் போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்காத இந்த அரசை வன்மையாக கண்டிக்கிறேன்.

முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றுடன் கையெழுத்திட்ட மூன்று அறிவிப்புகளில் ஒன்றான போதைப் பொருள் தடுப்பு சிறப்பு பிரிவு என்ன ஆனது? அது செயலிழந்திருப்பதையே இதுபோன்ற சம்பவங்கள் உணர்த்துகிறது.

இந்த விவகாரத்தில் தமிழக அரசு உடனடியாக தலையிட்டு, பள்ளி மாணவர்களின் பாதுகாப்பிற்கும் போதைப்பொருள் தடுப்பிற்கும் கடுமையான மற்றும் நிரந்தர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





நாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, விளாத்திகுளம் கால்பந்து கழகம் நடத்தும் நான்காம் ஆண்டு ஐவர் கால்பந்து போட்டியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்கண்டேயன் துவக்கி வைத்தார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர் இம்மானுவேல்,பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தம்பி ஏ. தேவேந்திரன்

**ஆகஸ்ட் 17 (1995)**



திராவிட இயக்க கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தி.மு.கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், தொடர்ந்து 38 ஆண்டுகளாக நகர்மன்ற உறுப்பினராகவும், மயிலாடுதுறை நகர்மன்றத் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கல்லக்குடி, கருப்புக் கொடி, விலைவாசிய உயர்வு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று 17 முறை சிறை சென்றவர்.

"மதுரைக்கு முத்து, மாயூரத்திற்கு தம்பி தேவேந்திரன்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### செஞ்சி, மேல்மலையனூர்,

# வல்லம் பகுதியில் சுதந்திர தின விழா!

செஞ்சி, ஆக. 17-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நாட்டின் 80வது சுதந்திர தின விழாவை சிறப்பாக கொண்டாடினர். இதை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தியின் திரு உருவ படத்திற்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து ஒன்றிய சேர்மன் விஜயகுமார் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

இதில் துணை சேர்மன் ஜெயபாலன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மணிமாறன், உதயகுமார் ,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சசிகலா,கன்னியப்பன், கலா,ஒன்றிய கவுன்சிலர்கள் பச்சையப்பன், கேமல்,, பனிமலர் ராஜாராம், மல்லிகா சேகர்,கமலா, பூங்காவனம் ராமசாமி,,மற்றும் ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற 80வது சுதந்திர தின விழாவில் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன், ஏகாம்பரம், ஒன்றிய செயலாளர் செயலாளர் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன்,ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,,ஒன்றிய கவுன்சிலர்கள் அலுவலகப் பணியாளர்கள் உள்ளிட்ட கலந்து கொண்டனர்.

இதே போன்று வல்லம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய சேர்மன் அமுதா ரவிக்குமார் தேசிய கொடியை ஏற்றி வைத்துமரியாதை செலுத்தி இனிப்பு வழங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபா சங்கர், ராஜா, ஒன்றிய கவுன்சிலர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. ஆனந்தன்

**ஆகஸ்ட் 17 (2010)**



நீதி கட்சித் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் பேச்சாற்றலாலும் இளமை பருவத்தில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.

35 ஆண்டுகாலம் தொடர்ந்து பி.என்.பாளையம் ஊராட்சிச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இரயில் மறியல் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**